# சங்க இலக்கியங்களில் குறியீட்டு மரபுகள்

முனைவர்.கா.உமாராஜ்

உதவிப்பேராசிரியர்

மொழியியல் துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை -625021

9487223316

## அறிமுகம்

### மொழி

மொழி என்பது ஒருவர் மற்றொருவருடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படும் ஒரு சாதனமாகும். பல்வேறு ஊடகங்களின் வாயிலாக இத்தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.அவற்றுள் சில ஊடகங்கள் கலைகளாகவும் பரிணாமம் பெறுகின்றன. அத்தகு தகவல் தொடர்புக் கலைகளுள் ஒன்றுதான் இலக்கியம். ஆகவே இலக்கியத்துள் தகவல் தொடர்பு அமைப்பு எவ்வாறு அமைகிறது என்பதை அறிய வேண்டியது அவசியமாகிறது. இலக்கியங்கள் பல உத்திகளைப் பயன்படுத்தி தகவல்களைப் புலப்படுத்துகின்றன. அவற்றுள் ஒர் உத்திதான் குறியீட்டு மரபுகள். இவ்வுத்திகள் கவிஞனின் பாடுபொருள் வெளிப்பாட்டிற்குப் பெரிதும் உதவுகின்றன எனலாம். " கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் எப்பொழுதெல்லாம் மறுக்கப்படுகிறதோ அப்போதெல்லாம் குறியீட்டு மரபுகள் கலை இலக்கிய இயக்கங்களின் முதல் உத்தியாகப் பயன்பட்டு வருகிறது. மேலும் குறியீட்டு மரபுகள் தன்னைக் குறித்து நிற்பதோடு தனி மனிதன் ,சாமுதாய மனிதன் என்கிற பொருண்மையும் மறைமுகமாக உணர்த்தும்.சங்க இலக்கியங்களில் குறியீட்டு மரபுகள் எவ்வாறு அமைக்கப்பட்டு தகவல்களைப் புலப்படுத்துகிறது என்பதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### சங்க இலக்கியம்

**சங்கஇலக்கியம்** எனப்படுவது தமிழில் கிறிஸ்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பல தரப்பட்ட தொழில் நிலையுள்ளோரும் பெண்களும், நாடாளும் மன்னரும் உண்டு. சங்க இலக்கியங்கள் அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை

நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளன. பண்டைத்தமிழரது காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு,வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப்பாடல்கள் அறியத்தருகின்றன.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி. வை. தாமோதரம்பிள்ளை, உ. வே. சாமிநாதையர்ஆகியோரது முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சுருப் பெற்றன. சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகைநூல்கள்,பத்துப்பாட்டு நூல்கள் எனப் பெரும்பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

### குறியியல்

சமுதாய வாழ்வில் மக்கள் தங்கள் கருத்தைப் புலப்படுத்த பயன்படுத்தும் குறிகளைப் பற்றிய அறிவியல் குறியியல் ஆகும் என பெர்டினண்டு டி சசூர் குறிப்பிடுகிறார். சமுதாயத்தின் பொருண்மையைப் புலப்படுத்துதல் பற்றிய அறிவியல் என்று கெர் எலம் குறிப்பிடுகிறார். குறியியலின் அடிப்படை அலகு 'குறி' என்பாதாகும்.

### குறி

'குறி' என்பதற்கு நிகரான ஆங்கிலச் சொல் 'sign' என்ற சொல்லாகும் . இச்சொல் 'symbolon' என்ற கிரேக்கச் சொல்லிருந்துத் தோன்றியாதாகும்.பேச்சு தமிழிலும் எழுத்து தமிழிலும் 'குறி' என்ற சொல் பல்வேறு பொருண்மைகளைக் கொண்டதாகவே வழங்கப்படுகிறது.

1.ஆண் குறி பெண் குறி

2. குறி தப்பிவிட்டது

3.குறிக்கோளுடன் வாழ வேண்டும்.

என்னும் சான்றுகளில் முறையே அடையாளம், இலக்கு, நோக்கம் என்னும் பொருண்மைகள் அமைந்திருத்தலைக் காணலாம்

'குறி' என்ற சொல் "அடையாளம்" என்ற பொருளில் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளார்.

குறியென படுவது இரவினும் பகலினும்

அறியத் தோன்றும் ஆற்றது என்ப ( களவியல்:40)

மர்ரெ ராஜம் அவர்கள் "குறி" என்ற சொல் பின்வரும் பொருள்களில் அமையும் என்கிறார். 1. குறித்த இடம் 2. குறுமை2. அடையாளம். 4. கருதுதல்

5. ஊதுதல்: 6. குறிப்பு 7. இலக்கணம் 8. குறித்த அளவு 9. முகூர்த்தம் 10. நற் குணம் 11. நிமித்தம் 12. வடு 13. பெயர் 14. குறிப்பு 15. உட்பொருள்

16. உட்கிடை 17. எண் (கணக்கு) 18. தகரோபசனை 19. தியானம் 20. புலப்பாடு 21. சிவ லிங்கம் 22. செல் சார்வு 23. இலக்கு 24. கடவுள் திருவுரு

25. வரம்பு (எல்லை) 26. விதி (முறை) 27. எழுத்து (அன்று எழுதியது) 28. அம்பு 29. உபாயம். 30. பருவம் 31. புண்டரம் 32. முத்திரை

ஏ.சிதம்பர நாத செட்டியார் 'குறி' என்ற சொல்லுக்கு அடையாளம், தெரிந்த எழுத்துக்குப் பதிலாக மேற்கொள்ளப்படும் தெரியவரா எழுத்து என்பனப் போன்ற 34 பொருண்மைகளைக் குறிக்கிறது என குறிப்பிடுகிறார்.

பியார்ஸ் என்ற அறிஞர் "குறி" என்பதை பின்வருமாறு விளக்குகிறார்."ஒரு பொருள் யாரோ ஒருவருக்கு ஏதோ ஒரு முறையில் விளக்குவது தான் குறி" . "ஒரு பொருள்" என்பது எழுத்தாக, ஒலியாக, வாசனையாக அணிகலனாக , ஆடையாக என எந்தப் பொருளாகவும் இருக்கலாம். "ஏதோ ஒரு முறையில்" என்பது அந்த ப் பொருளைப் பயன்படுத்தும் இனத்தின் பண்பாட்டுச் சூழலைப் பொறுத்து அமைவதாகும்.

சசூர் குறிப்பான்(signifier), குறிப்பீடு (signified) என்ற கூறுகளைக் கொண்டு " குறியை" விளக்க முற்படுகிறார். அவருடைய கருத்துப்படி குறிப்பானும் குறிப்பீடும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போலாகும். அவற்றைப் பிரிக்க இயலாது. உதாரணமாக " ரோஜா" என்பது " குறிப்பான்(signifier), " ஒரு வகையான பூ" என்பது குறிப்பீடு(signified). ஆனால் ஒரு வாலிபர் காதலின் அடையாளாமாகக் கொடுக்கும்போது " ரோஜா பூ " குறிப்பான்(signifier) , " காதல்" என்பது குறிப்பீடு(signified).

**குறிகளின் வகைகள்**

குறிகளை மூன்று வகைகளாக ப் பிரிக்கலாம். அவை 1.உருவக் குறிகள் 2. சுட்டுக் குறிகள் 3. குறியீட்டுக் குறிகள் . உருவக் குறியில் ஒரு குறிப்பான், ஒரு குறிப்பீட்டின் பௌதிகக்

கூறினை மட்டும் பிரதிபலித்துக் காட்டுகிறது. சுட்டுக் குறியில் ஒரு குறிப்பான் ஒரே ஒரு குறியீட்டைப் பெறுவதற்கான வழியாகச் செயல்படுகிறது. குறியீட்டுக் குறியில் ஒரு குறிப்பான் ஒன்றுக்கு மேற்பட்ட குறிப்பீடுகளைத் தருவதாக உள்ளது. தமிழ் மொழியைப்

பொறுத்த வரையில், குறியீட்டுக் குறியின் பயன்பாட்டு மரபு, தொல்காப்பியத்திலிருந்தே தோற்றம் பெற்றுள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் அடையாளப் பூக்கள் அனைத்துமே குறியீட்டுக் குறிகள்தாம். " ஒரு குறிப்பீடு வேறொரு குறிப்பீட்டுக்குப் பதிலாக நிற்பது தான் குறியீட்டுக் குறியிலாகுமென ஹாக்ஸ் என்ற அறிஞர் குறிப்பிடுவார். குறியீட்டுக் குறியில் ஒரு குறிப்பானுக்கும் குறிப்பீட்டிற்கும் இடையிலான உறவு இடுகுறித் தன்மை வாய்ந்தது.

குறியீட்டு குறியியல்

பாடல்1:

பொய்கை ஆம்பல் அணிநிறக் கொழுமுகை

வண்டுவாய் திறக்கும் தந்துறை ஊரன்" ( குறுந்: 370)

ஆம்பல் , வண்டு என்பன இரு குறிப்பான்கள். அதன் குறிப்பீடுகள் " ஒரு வகையான மலர்", "ஒரு வகையான உயிரி" என்பனவாகும் . ஆனால் அடுத்த நிலையில் " பரத்தை" " தலைவன்" என்னும் குறிப்பீடுகள் கிடைக்கின்றன.இதில் குறிப்பானும், குறிப்பீடும் இணைந்து நேரடிப் பொருண்மை அளிக்காமல் வேறொரு பொருண்மையை அளிப்பதாக உள்ளது.

பாடல் 2:

யாரினும் இனியன்; பேரன் பின்னே

உள்ளூர்க் குரி இத் துள்ளு நடைச் சேவல்

சூன்முதிர் பேடைக்கு ஈன் இல் இழை இயர்

தேம் பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்

நாறா வெண்பூக் கொழூதும்

யாணர் ஊரன் பாணன் வாயே ( குறு:85)

இப்பாடலின் பொருள் பின்வருமாறு

பெட்டைக்குருவி கருக்கொண்டதறிந்து ஆண் குருவி கரும்பின் வெண்பூவைக் கொண்டு வந்து கூடு கட்டி முடித்தது. இத்தகைய வளமான ஊரின் தலைவன் என்று தோழி உரைக்கிறாள்.

குறியீடு

இப்பாடலில் பெட்டைக்குருவியை தலைவிக்கும் ஆண் குருவியைத் தலைவனுக்கும் ஒப்புமைப்படுத்தியுள்ளனர். பெட்டைக்குருவி கருத்தரித்திருப்பது தலைவி கருவுற்று இருக்கிறாள் என்பதற்கு குறியீடாகும்.

கருவுற்ற பெட்டைக்குருவி | கருவுற்ற ஒரு வகைப் பறவை

| |

குறிப்பான் | குறிப்பீடு

| |

---------------------------------------------------------------------------

குறியீட்டுக் குறி

கருவுற்ற தலைவி (கருவுற்ற பெட்டைக் குருவியின் இயல்பினையுடையவளாக தலைவி உள்ளாள்)

கூடு கட்டும் ஆண் குருவி | கூடு கட்டக் கூடிய ஒரு வகைப் பறவை

குறிப்பான் | குறிப்பீடு

| |

---------------------------------------------------------------------------

குறியீட்டுக் குறி

பொறுப்புள்ள தலைவன்(கருவுற்ற தலைவிக்கு தகுந்த இடம் அமைத்துத் தரும் தலைவன்)

பாடல் -2

ஒன்றேன் அல்லேன் ஒன்றுவென் குன்றத்துப்

பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை

குறவர் மகளிற் கூந்தர் பெய்ம்மார்

நின்றுகொய மலரும் நாடனொடு

ஒன்றேன் தோழி ஒன்றினானே ( குறு: 208)

வேங்கை மரம் ஒரு வகை மரம்

| |

குறிப்பான் குறிப்பீடு

| |

---------------------------------------------------------------------------

குறியீட்டுக் குறி

தலைவி (வேங்கை மரத்திற்கு ஒப்பனாவள்)

மிதிக்கும் யானைகள்( தலைவன்,தாய்) மிதிக்கும் பண்புடைய யானைகள்

குறிப்பான் குறிப்பீடு

| |

---------------------------------------------------------------------------

குறியீட்டுக் குறி

**தலைவன் புணர்ச்சிக்காக அவளை நெருக்கடி செய்கிறான்.. தாய் காப்புக்குள் வைத்து நெருக்கடி செய்கிறாள். அதனால் தலைவிக்கு திருமணம் செய்ய வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகிறாள்.**

**பாடல்-3**

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவு இன்றே சாரல்**
**கருங்காற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இறைக்கும் நாடனொடு நட்பே** [3]

குறிஞ்சி பூ ஒரு வகை பூ

| |

குறிப்பான் குறிப்பீடு

| |

-----------------------------------------------------------------------------

குறியீட்டுக் குறி

குறிஞ்சி பூ என்பது தலைவி

தேனை இறைத்தல்   குறிப்பான்(signifier)   தேனை நுகர்தல்(signified)

குறிப்பான்   குறிப்பீடு

|   |

-----------------------------------------------------------------------------

குறியீட்டுக் குறி

தலைவியைத் தலைவன் நுகர்ந்தான்.

**முடிவுரை**

சசூர், குறிப்பான்(signifier), குறிப்பீடு (signified) என்ற கூறுகளைக் கொண்டு " குறியை" விளக்கியுள்ளார். இக்கோட்பாட்டின் அடிப்படையில் சங்க இலக்கியத்திலுள்ள சில பாடல்களை எடுத்துக்கொண்டு ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின் மூலம் பின்வரும் முடிவுகள் அறியப்பட்டன.1)சங்க இலக்கிய புலவர்கள் உள்ளுறை, இறைச்சி போன்றவற்றைத் தகவல் தொடர்பு உத்தியாக பயன்படுத்தியுள்ளனர். 2)ஒவ்வொரு சமுதாய மக்களுக்கு ஏற்ப பாடல்களில் முதல், கரு, உரிப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Filename: Communication department seminar (2)
Directory: C:\Documents and Settings\akilan\My Documents
Template: C:\Documents and Settings\akilan\Application Data\Microsoft\Templates\Normal.dotm
Title:
Subject:
Author: umaraj
Keywords:
Comments:
Creation Date: 3/14/2014 1:10:00 PM
Change Number: 8
Last Saved On: 3/23/2014 11:49:00 AM
Last Saved By: umaraj
Total Editing Time: 63 Minutes
Last Printed On: 8/14/2017 11:25:00 AM
As of Last Complete Printing
Number of Pages: 7
Number of Words: 1,453 (approx.)
Number of Characters: 8,286 (approx.)